**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபை மற்றும் அதன் துணை நிறுவனம் - 2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையின் ''சபை'' மற்றும் அதன் துணை நிறுவனத்தின் ''தொகுதி'' 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து, சபையின் மற்றும் தொகுதியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்தும் வகையில் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின்தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்நியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு, சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும், கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக சபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழில் தருநரால் சபைக்கு அனுப்பும் பங்களிப்புகள் அந்தந்த உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்பட வேண்டும். இருப்பினும், 1981 முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரை 5553 தொழில் தருநர்களால் சபைக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 611 மில்லியன் பங்களிப்புகள் இதுவரை உறுப்பினர் கணக்குகளில் செலவு வைக்கப்படவில்லை, மேலும் இதில் உள்ளடங்கியுள்ள 2015 முதல் 2023 வரையிலான காலகட்டத்துடன் தொடர்புடைய தொகை ரூபா 597 மில்லியன் ஆகும். இதன் காரணமாக, உறுப்பினர் நிதிய மீதி மற்றும் தனிப்பட்ட கணக்கு மீதிகளுக்கும் இடையில் இணக்கமின்மைகளும், மேலும் உறுப்பினர்கள் தங்கள் பங்களிப்புகளை திரும்பப் பெறுவதில் பாதகமான சூழ்நிலையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. | 1981-2014 காலகட்டத்திற்கான பகிர்ந்தளிக்கப்படாத மீதி ரூபா 14.547 மில்லியன் ஆக காணப்பட்டதுடன், மீதி முக்கியமாக 03 தொழில்தருநர் நிறுவனங்களுடன் தொடர்புடையது. அந்த நிறுவனங்கள் முறையே 35 ஆண்டுகள், 31 ஆண்டுகள் மற்றும் 17 ஆண்டுகளுக்கு முன்பு மூடப்பட்டதால், அந்தப் பணத்தை பகிர்ந்தளிப்பதற்கான உறுப்பினர் விபரங்கள் எங்களிடம் இல்லாதிருந்ததுடன், 1981 - 2014 காலகட்டத்துடன் தொடர்புடைய விநியோகிக்கப்படாத நிதியை நாங்கள் தற்காலிகமாகத் தடுக்கிறோம். மேலும் 2025 மே 14 ஆந் திகதியில் உள்ளபடியாக 2015-2023 காலகட்டத்துடன் தொடர்புடைய மொத்த விநியோகிக்கப்படாத பங்களிப்புகள் ரூபா 597 மில்லியனாகக் குறைந்துள்ளன. செயலில் உள்ள நிறுவனங்கள் தொடர்பான உறுப்பினர் தகவல்களை | பங்களிப்புகள் செலவு வைக்க வேண்டிய உறுப்பினர்களை துல்லியமாக அடையாளம் காணவும், உறுப்பினர் கட்டணங்களை வசூலிக்கும் புதிய முறையை மேம்படுத்தவும், அடையாளம் காணப்படாத பணத்தை உடனடியாக அடையாளம் காணவும் ஒரு வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்காத தொழில்தருநர்களிடமிருந்து ஒவ்வொரு பெறுவனவுகள் பற்றிய விவரங்களும் பிராந்திய அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 150 தொழில்தருநர்கள் தொடர்பான சுமார் 790 ‘‘சீ’’ அறிக்கைகள் செயல்படாத தொழில்தருநர் நிறுவனங்களின் தொழில்தருநர்களால் மத்திய வங்கியின் ஊழியர் சேம திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, விநியோகிக்கப்படாத பங்களிப்புகளை உறுப்பினர்களின் தனிப்பட்ட கணக்குகளில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் செல்லுபடியாகும் அடையாள அட்டை எண்கள் இல்லாமல் பராமரிக்கப்பட்ட 212 கணக்குகளில் ரூபா 1.22 மில்லியன் பணம் காணப்பட்டதுடன், 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் இந்த கணக்குகள் அடையாளம் காணப்பட்டு உறுப்பினர்களுக்கு செலவு வைக்கப்படவில்லை. | அடையாளம் காண முடியாத பங்களிப்புகள் தொடர்பாக உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் அடையாள அட்டை எண்களைக் கொண்ட 212 உறுப்பினர் கணக்குகளில், 3 உறுப்பினர் கணக்குகளில் உறுப்பினரின் பெயர் உள்ளிடப்பட்டுள்ளது. எஞ்சிய உறுப்பினர் கணக்குகளுடன் தொடர்புடைய பங்களிப்பு பணம் 1981-2002 இற்கு இடைப்பட்ட காலத்திற்கு உரியவை என்பதுடன், அந்தக் காலகட்டத்திற்குரிய பதிவுகள் எதுவும் இல்லாததால், இந்தக் கணக்குகளை செயலற்ற கணக்குகளாக மாற்றப்பட்டு, தொடர்புடைய உறுப்பினர்களால் உறுதிப்படுத்தக்கூடிய தகவல்கள் ஏதேனும் வழங்கப்பட்டால், கணக்கு மீண்டும் செயல்படுத்தப்பட்டு பணம் செலுத்தப்படும் என்பது. | மீதிகள் அடையாளம் காணப்பட்டு உறுப்பினர் கணக்குகளில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தொழில் தருநரால் சபைக்கு பங்களிப்புப் பணம் அனுப்பப்பட்ட போதிலும், இந்த தொழில் தருநர்களில் அடையாளம் காண முடியாத V999 மற்றும் V100 தொங்கல் கணக்குகளின் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலவும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.62 மில்லியன் ஆகும். 1996 முதல் 2022 வரை நிலவும் இந்த மீதிகள், இதுவரை தொடர்புடைய உறுப்பினர் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சில தொழில்தருநர்களால் பங்களிப்பு பணம் சபைக்கு அனுப்பப்பட்டிருந்தாலும், பணம் செலுத்திய தொழில்தருநர்களின் விவரங்களை உரிய முறையில் பெறத் தவறியதால், அடையாளம் காணப்படாத மீதிகள் V100 மற்றும் V999 தொங்கல் கணக்குகளுக்கு கணக்கு வைக்கப்பட்டு, தொழில்தருநர்களின் தகவலைப் பெற்ற பிறகு தொடர்புடைய கணக்குகளுக்கு மாற்றப்படுகின்றன. அந்தத் தொகையில், 2020 ஆம் ஆண்டின் பின்னர் | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| | தொழில்தருநர்களால் வங்கியிலிடப்பட்ட ரூபா 0.39 மில்லியன் தொகையுடன் தொடர்புடைய கட்டண விவரங்கள் அவ்வப்போது தொழில்தருநர்களால் வழங்கப்படுகின்றன, மேலும் தொடர்புடைய சந்தர்ப்பங்களில், அந்தக் கொடுப்பனவுகள் V999 கணக்கிலிருந்து சரியான தொழில்தருநர் கணக்குகளுக்கு கணக்கு வைக்கப்படுகின்றன. இருப்பினும், 2006 ஆம் ஆண்டுக்கு முன்பு செய்யப்பட்ட ரூபா 6.23 மில்லியனான செலவு வைத்தல்கள் தற்போது அடையாளம் காண முடியாதுள்ளமையால் மற்றும் இது தொடர்பாக எந்த கோரிக்கைகளும் விடுக்கப்படாததால், எதிர்காலத்தில் பணிப்பாளர் குழுவின் அறிக்கையின் மூலம் அந்தத் தொகையை திரும்பப் பெறுவதற்கான ஒப்புதலைப் பெற்ற பிறகு, அந்தத் தொகையை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

### 1.5.2 கணக்காய்வுக்கான சான்றுகள் இல்லாதிருந்தமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நாளதுவரையாக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நாளதுவரையாக்கப்பட்டவுடன் அதை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக்கூற்றில் ஏனைய சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த தபால் திணைக்களத்திடமிருந்து பெற வேண்டிய ரூபா 5.58 மில்லியன் தொகை தொடர்பில் மீதி உறுதிப்படுத்தலொன்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் இன்னும் பெறப்படவில்லை, அவை கிடைத்தவுடன் சமர்ப்பிக்கப்படும். | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களை உடனடியாகப் பெற்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மறறும் செலுத்த வேண்டிய பணம்

### 1.6.1 பெற வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நவம் மாவத்தை வாகன நிறுத்துநர்களிடமிருந்து 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக | வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபட தேவையான அறிவுறுத்தல்கள் | நிலுவைத் தொகையை வசூலிக்க |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய மொத்த வரி நிலுவைத் தொகை ரூபா 6.79 மில்லியனாக இருந்ததுடன், இதில் ரூபா 3.65 மில்லியன் 2016 முதல் 2024 வரை 63 நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ஆகும். தற்போது வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களில் ஈடுபட சபை நடவடிக்கை எடுக்காததால், நிலுவையில் உள்ள பணத்தை முறையாக வசூலிக்க சட்ட நடவடிக்கை எடுப்பதில் தடையாக இருப்பது அவதானிக்கப்பட்டது. | வழங்கப்பட்டுள்ளதுடன், நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. | முறையான திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் 1994 ஆம் ஆண்டு 14.48 சதவீத நிலையான வட்டி விகிதத்தில் பெருந்தோட்டக் கம்பனியொன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 15 மில்லியன் கடன் பத்திர முதலீட்டுக்காக 2024 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிலுவையில் உள்ள வட்டித் தொகை ரூபா 26.29 மில்லியனாக இருந்தது. இது தொடர்பாக, 2023 மார்ச் 27 ஆந் திகதி சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் தலையீட்டுடன் நடந்த கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, சபைக்கு நிலுவைத் தொகையை செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்ட போதிலும், 2024 திசெம்பர் மாத இறுதி வரையிலும் இந்தப் பணத்தை சபைக்கு வசூலிக்கப்படுவது குறித்து உறுதியான நிச்சயத்தன்மையொன்று காணப்படவில்லை. | எல்கடுவ பெருந்தோட்ட கம்பனியால் நிலுவையில் உள்ள வட்டித் தொகையைத் தீர்க்க ஒரு மீள் செலுத்தும் திட்டம் (Repayment Plan) சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதைப் ஆராய்ந்த பின்னர் இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் அந்தத் திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | பின்தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் நிலுவையில் உள்ள வட்டி வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2002 ஆம் ஆண்டு முதிர்ச்சியடையும் ஒரு கம்பனியின் உத்தரவாதப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 12.17 மில்லியனுக்கு மற்றும் 2007 ஆம் ஆண்டு முதிர்ச்சியடையும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 7.45 மில்லியனுக்கும் முறையே ரூபா 15.21 மில்லியன் மற்றும் ரூபா 0.37 மில்லியன் வட்டி அறவிடப்பட வேண்டியிருந்தது. மாவட்ட நீதிமன்றம் 2008 அக்டோபர் 03 ஆம் திகதி இந்த நிறுவனத்தை கலைக்க உத்தரவு பிறப்பித்திருந்தாலும், 2024 திசெம்பர் மாத இறுதி வரை இந்த பணத்தை அறவிடுதல் குறித்து சபைக்கு எந்த குறிப்பிட்ட நிச்சயத்தன்மையும் காணப்படவில்லை. இதன் விளைவாக உறுப்பினர்களுக்கு செலுத்த வேண்டிய நலன்களில் ரூபா 15.58 மில்லியன் குறைந்திருந்தது. | கம்பனியை கலைக்க 2018 ஆம் ஆண்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தாலும், இன்றுவரை எந்த கலைப்பாளரும் நியமிக்கப்படவில்லை என்பதும் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் கலைப்பு வழக்கில் கம்பனியின் கடன் கொடுத்த தரப்பினால் ரூபா 42.6 மில்லியன் தொகையை செலவு வைக்கப்பட்டுள்ளது. அந்த தொகையில் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திலிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள எந்தவொரு தொகையையும் மீட்டெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆலோசனை கோரி 2024 மார்ச் 12 ஆந் திகதி சட்டமா | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | | அதிபருக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தப் பதிலைப் பெற்ற பிறகு, அதன் உள்ளடக்கங்களைக் கருத்தில் கொண்டு மேலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இந்தத் தொகை தொடர்பாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | சபையால் 14 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட இடர்கடன் மற்றும் வாகன கடன் தொகையில் ரூபா 5.5 மில்லியன் நிலுவைத் தொகை உள்ளதுடன், இது தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | சேவையிலிருந்து ஓய்வு பெறல், சேவை இடைநீக்கம் மற்றும் பணிநீக்கம் காரணமாக இந்த உத்தியோகத்தர்கள் தற்போது சபையில் சேவையை விட்டு வெளியேறியுள்ளதால், மீதமுள்ள தொகையை இறுதி கொடுப்பனவுகள் மூலம் அவர்களிடமிருந்து வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, மேலும் இது தொடர்பாக நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | பெற வேண்டிய பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உரிமை கோரப்படாத பொது பிரதிபலன் கணக்குகளில் நிலவும் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7.8 மில்லியனாக இருந்ததுடன், அதில் ரூபா 4.5 மில்லியன் 2001 மற்றும் 2023 க்கு இடைப்பட்ட காலத்திற்குரியது ஆகும். முந்தைய ஆண்டின் மீதியை உறுப்பினரின் கணக்கில் செலவு வைக்க செயல்படுத்தப்பட்ட நடைமுறை மேலும் மேம்படுத்தப்பட வேண்டும் என்பது அவதானிக்கப்பட்டது. | 2025 ஜனவரி 01 முதல் 2025 ஏப்ரல் 30 வரை 38 உறுப்பினர்களுக்கு ரூபா 1.7 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விடுவிக்கப்பட்ட 38 உறுப்பினர்களில், 37 பேர் 2024 திசெம்பர் மாதத்தில் மீள கிடைத்த பிரதிபலன் விடுவிப்புகளாவதுடன், இது ரூபா 1.6 மில்லியன் ஆகும். ஏதேனும் ஒரு நிதியாண்டிற்கு ஆரம்பத்தில் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம், பின்னர் அதிகரிக்கப்படுகின்றமையால் அத்தகைய அதிகரிப்பு திகதி வரை செலுத்தப்பட்ட சாதாரண பிரதிபலன் விண்ணப்பங்களுக்கு அதிகரித்த வட்டி விகிதத்தில் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட வேண்டும். 2018, 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான அடுத்த ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதம் பின்னர் முறையே 0.5 சதவீதம், 1.75 சதவீதம் மற்றும் 1 சதவீதம் அதிகரிக்கப்பட்டது. | குறித்த பிரதிபலன்களை இனங்காண்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படடு, பணத்தை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நாரஹேன்பிட்டி சிறப்பு பொருளாதார மத்திய நிலையத்தில் வாடகை அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வரும் சபையின் ஆவணக் காப்பகத்திற்கு 2022 ஏப்ரல் முதல் 2024 திசெம்பர் வரை இன்னும் முறையான வாடகை ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிராததுடன், இந்த காலகட்டத்திற்கு நிலுவைத் தொகை ரூபா 6.4 மில்லியன் ஆகும். | களஞ்சிய வளாகம் சபையின் ஆவணக் காப்பகங்களாக பராமரிப்பதற்காக திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள நாரஹேன்பிட்டி சிறப்பு பொருளாதார மத்திய நிலைய முகாமைத்துவ நம்பிக்கைப் பொறுப்பிலிருந்து 2019 ஆம் ஆண்டு முறையாகக் கையகப்படுத்தப்பட்டதுடன், களஞ்சிய வளாகங்கள் ஏப்ரல் 2022 முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்பட்டன. நாங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு சென்று சந்தித்து கரந்துரையாடினோம். இருப்பினும், எங்களுக்கு பதில் கிடைக்காததால், 2025 பிப்ரவரி 17 ஆந் திகதி அன்று மீண்டும் ஒரு நினைவூட்டல் கடிதத்தை அனுப்பி, இதை நினைவூட்ட மீண்டும் தொலைபேசி அழைப்புகளை மேற்கொண்டோம். சபையினால் வாடகை அடிப்படையில் கையகப்படுத்திய இந்தக் கட்டிடங்களுக்கான வாடகை ஒப்பந்தங்களை குத்தகைதாரர் தயாரித்து வருகிறார். எனவே, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தாமதம் காரணமாக, இந்த ஒப்பந்தம் தாமதமாகியுள்ளது, மேலும் இந்த சபையினால் ஒப்பந்தம் இல்லாமல் வாடகை செலுத்த முடியாது என்பதால், கட்டணங்களுடன் அபராதங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த ஒப்பந்தம் இல்லாதது தொடர்பான பிரச்சினை தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் விவாதிக்கப்பட்டு வருகிறது. | முறையான உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் 2024 ஆம் ஆண்டில் இறப்பு சலுகைகளை வழங்க எடுக்கும் நேரத்தை 40 நாட்களாகக் குறைக்க வருடாந்திர செயல் திட்டம் திட்டமிட்டிருந்தாலும், உண்மையான நாட்களின் எண்ணிக்கை 60 என அறிவிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில், இதற்காக எடுக்கப்பட்ட | 2024 ஆம் ஆண்டில் 2,872 இறப்பு உதவித்தொகை விண்ணப்பங்களுக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளன. வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி பூர்த்தி செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்படும் உதவித்தொகை விண்ணப்பங்களை உடனடியாக செலுத்த முடியும், அதே நேரத்தில் முழுமையடையாத | சரியான வாரிசுகள் மற்றும் தங்கியிருப்போருக்கு பணம் செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். |

நேரம் 60 நாட்கள் ஆகும். 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக உரித்து கோரப்படாத இறப்பு சலுகைகளின் மதிப்பு 1,295 பயனாளிகளுக்கு ரூபா 27.9 மில்லியனாக இருந்தது, அதே நேரத்தில் முந்தைய ஆண்டில், இந்த மதிப்பு ரூபா 23.37 மில்லியனாக இருந்தது. பரிந்துரைக்கப்பட்டவர்கள் தொடர்பான சிக்கல்களைக் குறைப்பதற்காக, உறுப்பினர்களின் தகவலுக்கான தரவுத்தள கட்டமைப்பு தயாரிக்கப்பட்டது, மேலும் விடுபட்ட பிரிவுகளை நிறைவு செய்வதற்கும், சார்புடையவர்கள் தொடர்பான சபையின் தற்போதைய கட்டமைப்பைப் புதுப்பிப்பதற்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களில் முடிவுகள் எடுக்கப்பட்டன, ஆனால் அது இதுவரை செயல்படுத்தப்படவில்லை. ஆண்டுதோறும் பரிந்துரைக்கப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்ள தொழில் திணைக்களத்திற்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படுவதுடன், 2024 ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்ட தகவல்களைப் பெறுவதற்காக தொழிலாளர் ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூபா 111,525 ஆகும்.

விண்ணப்பங்களை செலுத்த 40 நாட்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தது. இறப்பு உதவித்தொகை கோரிக்கைகள் உறுப்பினரின் வாரிசுகள், தங்கியிருப்பவர்கள் அல்லது பரிந்துரைக்கப்பட்டவர்களால் செய்யப்படுகின்றன. உறுப்பினர் இறந்த பிறகு அவர் பணியாற்றிய நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் வாரிசுகள் அல்லது தங்கியிருப்பவர்களுக்குத் தெரியாததால், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதில் பெரும்பாலும் குறைபாடுகள் உள்ளன. சம்பந்தப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் வாரிசுகள் அல்லது சார்புடையவர்களுக்கு நாம் சுட்டிக்காட்டிய பிறகு, அத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்ய சிறிது நேரம் எடுக்கும் என்பதால், இறப்பு சலுகைகளை வழங்க 40 நாட்களுக்கு மேல் செலவிடப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்களின் ஓய்வு மற்றும் இடமாற்றத்தால் எழும் தற்போதைய வெற்றிடங்கள் இருந்தபோதிலும், தற்போதுள்ள ஊழியர்களால் ஆண்டுதோறும் பெறப்படும் விண்ணப்பங்களை விரைவில் மற்றும் துல்லியமாக செலுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.

## 1.7 சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 22 ஆந் திகதிய 2311/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் | 2023 பெப்ரவரி 01 ஆந் திகதி முதல் அமுலபடுத்தப்படும் வகையில் குறைந்தபட்சம் 15 ஊழியர்களைக் கொண்ட ஒவ்வொரு தொழில் தருநரும் சபைக்கு இலத்திரனியல் முறையில் பங்களிப்புகளையும் மாதாந்திர அறிக்கைகளையும் சமர்ப்பிக்க வேண்டும், மேலும் இந்த நடவடிக்கையின் நோக்கம் | 2022 திசெம்பர் 22 ஆந் திகதிய 2311/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பின்படி, 15 ஊழியர்களுக்கு மேல் உள்ள தொழில் தருநரும் சபைக்கு இலத்திரனியல் முறையில் பங்களிப்புகளைச் செலுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதுடன், தொழில் தருநர்களை அவ்வாறு | தொழில்தருநர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிற நடவடிக்கைகள் மூலம் தவணை அறிக்கைகளை பெற்றுக்கொள்வதை விரைவுபடுத்த வேண்டும். |

உறுப்பினர்களுக்கு பங்களிப்புகள் தாமதமின்றி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதாகும். 2023 ஆம் ஆண்டில் ரூபா 141 மில்லியன் பங்களிப்புகளைப் பெறுவது குறித்து 636 செயற்பாட்டிலுள்ள நிறுவனங்கள் சபைக்கு அரையாண்டு அறிக்கைகளை அனுப்பவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதேபோல், 2015 மற்றும் 2022 இற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், மொத்தம் 3,263 நிறுவனங்களிலிருந்து ரூபா 259 மில்லியன் பங்களிப்புகள் குறித்து அரையாண்டு அறிக்கைகள் சபைக்கு அனுப்பப்படவில்லை.

செய்ய வழிநடத்த தேவையான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. 2023 ஆம் ஆண்டிற்கான செயலில் உள்ள மற்றும் செயல்படாத நிறுவனங்களிடமிருந்து 1405 படிவம் II அறிக்கைகள் பெறப்படாததால் விநியோகிக்க முடியாத பங்களிப்புகளின் மீதி ரூபா 117 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, முன்னேற்றம் ரூபா 24 மில்லியன் ஆகும். 2015 - 2022 இற்கு இடையில், செயலில் உள்ள மற்றும் செயல்படாத தொழில்தருநர் நிறுவனங்களிடமிருந்து 3,336 படிவம் II அறிக்கைகள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியதாக காணப்பட்டதுடன், விநியோகிக்கப்பட வேண்டிய பங்களிப்புகளின் அளவு ரூபா 171 மில்லியனாகக் குறைக்கப்பட்டுள்ளது, அதே நேரத்தில் முன்னேற்றம் ரூபா 88 மில்லியன் ஆகும். மத்திய வங்கியின் ஊழியர் சேமலாப திணைக்களத்துடனான கலந்துரையாடல்களின்படி, 150 தொழில்தருநர் நிறுவனங்கள் தொடர்பான சுமார் 790 “c” அறிக்கைகள் எங்களுக்குக் கிடைத்துள்ளன, மேலும் ஒதுக்கப்படாத பங்களிப்புகளை உறுப்பினர் கணக்குகளில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | 396(ஈ) | 06 மாதங்களுக்கு முன்பு வழங்கப்பட்ட மொத்தம் ரூபா 0.7 மில்லியன் பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் பட்டியலில் உள்ள ரூ. 0.7 மில்லியன் மதிப்புள்ள 16 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 756(4) | பொருள் மெய்மையாய்வின் போது அடையாளம் காணப்பட்ட பெரும்பாலான பயன்படுத்தக்கூடிய பொருட்களை வேறொரு நிறுவனத்தில் பயன்படுத்த வழங்க முடியுமான போதிலும், அவ்வாறு செய்யாமல், 48 மடி கணினிகள் மற்றும் 92 மானிட்டர்கள் களஞ்சியத்தில் செயலற்ற நிலையில் உள்ளன. | ஏதேனும் பொருள் தேவையற்றதாக இருக்கும்போது, அது அகற்றல் குழுவின் பரிந்துரையின் பேரில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அல்லது அரச பயிற்சிப் பள்ளிக்கு வழங்கப்படுகிறது. இந்த அகற்றல் பணி துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளமை. | -மேற்படி- |
| (iii) | 756(6) | 2024 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2025 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன்பு நிறைவு செய்யப்பட்டு, தொடர்புடைய அறிக்கை 2025 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் என்றாலும், பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2025 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2023 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் குறித்து இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 756(6) இன் படி 2024 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் 2025 ஏப்ரல் 04 ஆந் திகதி தொடங்கப்பட்டது. தற்போது இறுதி கட்டத்தில் இருப்பதால், பொருட்கள் கணக்கெடுப்பு அறிக்கை மே 31 க்கு முன்பு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் மற்றும் மிகைகள் குறித்து நடவடிக்கைகள் எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | 1646(ஈ) | ஒவ்வொரு மாதத்திற்கும் உரிய நாளாந்த ஓட்டப் பதிவுகளுடன் மாதாந்திர பயண பொழிப்புகளின் அசல் பிரதிகள் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும் எனினும், 52 வாகனங்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுவாக ஒரு ஓட்டப் பதிவு புத்தகம் சுமார் 3 மாத காலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது, மேலும் வாகன ஓட்டுநர் பதிவுகள் ஒவ்வொரு மாத இறுதியில் போக்குவரத்துப் பிரிவிற்கு கிடைப்பதில்லை. எதிர்காலத்தில் எங்களுக்குக் கிடைக்கும் ஓட்டப் பதிவுகளின் பொழிப்புகளை பூர்த்தி செய்த பின்னர் அனுப்பப்படும் என்பது. | -மேற்படி- |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2.7 ஆம் பந்தி | உரிய தகுதிகள் இல்லாத உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தற்போதுள்ள நடைமுறைக்கு புறம்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளரால் நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதலைப் பெற்றிருக்க வேண்டும் என்றாலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2016 நவம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனைக்குப் பிறகும், 12 மாத காலத்திற்குப் பிறகு அல்லது 25,000 கி.மீட்டர் தூரம் ஓட்டிய பிறகு அல்லது ஒரு பெரிய இயந்திர பழுதுபார்ப்புக்குப் பிறகு, எது முதலில் வருகிறதோ, அதற்குப் பிறகு எரிபொருள் சோதனை நடத்தப்பட வேண்டும், ஆனால் 52 வாகனங்களின் விஷயத்தில் இது செய்யப்படவில்லை. | தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட வாகனங்களின் எரிபொருள் நுகர்வு சரிபார்க்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதிக பணிச்சுமை காரணமாக பிராந்திய அலுவலகங்களுடன் இணைக்கப்பட்ட வாகனங்களின் பரிசோதனை செய்ய முடியாதுள்ளது. மேலும் தொடர்புடைய பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கை விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 5.1 ஆம் பந்தி | எரிபொருள் அளவு மற்றும் இயக்கப்படும் தூரம் நாளாந்தம் சம்பவக் குறிப்பு புத்தகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றாலும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையின் வாகனங்களுக்கான எரிபொருள், ஓட்டுநருடன் உத்தியோகத்தர் ஒருவர் பதிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையத்திற்குச் சென்று அதை முழுமையாக நிரப்புவதன் மூலம் வழங்கப்படுகின்றது. அங்கு, ஓட்டுநருக்கு ஒரு உறுதிச்சீட்டு வழங்கப்பட்டு வாகனத்தில் உள்ள எரிபொருளும் இயக்கப்படும் தூரமும் சமநிலைப்படுத்தப்படுவது அவ்வாறு செய்தால், எரிபொருள் நிரப்பும் போது பயன்படுத்தப்படும் எரிபொருளின் அளவிற்கும் கணக்கிடப்பட்ட எரிபொருளின் அளவிற்கும் இடையே முரண்பாடு ஏற்படும். | -மேற்படி- |
| (iii) | 06 ஆம் பந்தி | அதிகாரப்பூர்வ வாகனங்களுக்கான ஓட்டப் பதிவுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இணைக்கப்பட்ட வாகனங்களுக்கான படிவம் நிரப்பப்பட்டு வருகிறது, எதிர்காலத்தில் அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான தொகுதியின் நிதி விளைவுகள் ரூபா 55,200 மில்லியன் மற்றும் சபையின் நிதி விளைவுகள் ரூபா 54,498 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தொகுதியின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா 57,133 மில்லியன் மற்றும் ரூபா 55,942 மில்லியன் ஆகும். அதற்கிணங்க தொகுதியின் மற்றும் சபையின் நிதி விளைவுகள் முறையே ரூபா 193.3 மில்லியனாலும் ரூபா 144.3 மில்லியனாலும் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது சபையின் மற்றும் குழுமத்தின் வட்டி வருமானம் 2,561 மில்லியனால் குறைவடைந்தமை இதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொள்வனவு தேவைகளை துல்லியமாக மதிப்பிடத் தவறியதால், 2018 முதல் 2024 வரை சபையின் பதவியணிக்கு | ஒவ்வொரு 3 அல்லது 4 வருடங்களுக்கும் ஒரு தடவை அங்கீகரிக்கப்பட்ட அப்புறப்படுத்தும் செயல்முறைக்குப் பிறகு, | தேவையான அளவுகளை துல்லியமாக அடையாளம் |

| | | | |
|---|---|---|---|
| | விநியோகிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 3.5 மில்லியன் மதிப்புள்ள சீருடைகள் 2 முதல் 6 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்று களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | பயன்படுத்தப்படாத மிகையான சீருடைகளை களஞ்சியத்திலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதேபோல், 2018 முதல் 2022 வரை சேர்ந்த சீருடைகளை கைதவிர்க்கும் பணியும் தற்போது நடைபெற்று வருகிறது. | கண்டு, மதிப்பீடுகள் தயாரித்து கொள்வனவு செய்ய வேண்டும். |
| (ஆ) | சபையினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளைத் தொடர்ந்து, காணி ஆணையர் நாயகத்தினால் ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் சிறிபோபுர 90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 0.1012 ஹெக்டேர் பரப்பளவான நிலத்தை, 2020 ஜூலை 03 ஆந் திகதி அரசாங்க வர்த்தமானியில் வெளியிட்டு சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஆண்டுதோறும் ரூபா 240,000 படியாக செலுத்தப்பட்டிருந்தாலும், அதை சம்பந்தப்பட்ட நோக்கத்திற்காகப் பயன்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | 2020 ஜூலை 03 தேதியிட்ட அரசாங்க வர்த்தமானி மூலம் 30 ஆண்டு குத்தகை அடிப்படையில் ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகப் பிரிவின் சிறிபோபுரவில் உள்ள 90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள 0.1012 ஹெக்டேர் பரப்பளவான நிலம் சபைக்கு மாற்றப்பட்டது. 2020 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கொரோனா தொற்றுநோய் மற்றும் பிற பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2022 உப எண். (02) இன் 01/2024 தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை உப எண் 07.01 உப பந்தியின் மூலம் அது கட்டிட கட்டுமானத்திற்கு பயன்படுத்த முடியாதிருந்ததுடன, அத்தகைய கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஆக்கபூர்வமான முறையில் இதுவரை பயன்படுத்த முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் கொள்வனவு செய்த நோக்கத்திற்காக் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | காசோலை சேகரிப்பு வசதிகளை வழங்குவதற்காக 2006 ஆகஸ்ட் 06 அன்று இலங்கை வங்கிக்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபைக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின்படி, மறு கொள்முதல் ஒப்பந்தங்களில் ரூபா 10 மில்லியன் முதலீடு செய்யப்பட்டதுடன் ரூபா 490 மில்லியன் நிலையான வைப்புத்தொகையாக முதலீடு செய்யப்பட்டது. அத்தகைய வசதிகளை வழங்குவதற்காக சபை மாதந்தோறும் ரூபா 100,000 படியாக இலங்கை வங்கிக்கு செலுத்தப்படுகின்றது. 10 ஆண்டுகளுக்கும் மேலாக பராமரிக்கப்படும் இந்த வைப்புத்தொகைகள் தொடர்பாக சபைக்கு அதிக வருமான விகிதத்தைப் பெறுவதற்கு | இலங்கை வங்கிக்கும் சபைக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்படி ஆண்டுதோறும் புதுப்பிக்கப்படும் அடிப்படையில் நிலையான வைப்புத்தொகை மற்றும் மீள் கொள்முதல் ஒப்பந்தங்களில் ரூபா 500 மில்லியன் முதலீடு செய்யப்பட்டது. முதலீட்டை ஆண்டுதோறும் புதுப்பிக்கும் நேரத்தில், 3 அரசு வங்கிகளின் மீள் கொள்வனவுகள் மற்றும் நிலையான வைப்புத்தொகைகளுக்கு அன்று நிலவும் வட்டி விகிதங்கள் ஒப்பிடப்பட்டு, மிகவும் சாதகமான வட்டி விகிதத்தின் அடிப்படையில் இலங்கை வங்கியில் முதலீடு செய்யப்பட்டது. இது சபைக்கு காசோலைகள் மூலம் பங்களிப்புகளைச் சேகரிப்பதற்காகப் பராமரிக்கப்படும் முக்கிய வங்கிக் கணக்கான இதன் ஊடாக 2024 | சபைக்கு அதிக நலனுள்ள விகிதங்களை வழங்கும் வழிகளில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தங்களைத் திருத்தவோ அல்லது பிற பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்கவோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | ஆம் ஆண்டில் 496,027 காசோலைகளுக்கு ரூபா 7,049 மில்லியன் மதிப்புள்ள பரிவர்த்தனைகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக, அந்த கணக்கிற்கு உரியதாக இந்த ஆண்டில் மதிப்பிழந்த 1,583 காசோலைகளின் பெறுமதி ரூபா 30.5 மில்லியன் ஆகும். இந்த வங்கிக் கணக்கைப் பராமரிப்பதற்கு இலங்கை வங்கி சிறப்பு வசதிகளை வழங்கியுள்ளது. 2005 ஆம் ஆண்டு ஒப்புக் கொள்ளப்பட்டபடி, ஒரு நாளைக்கு இரண்டு முறை இலங்கை வங்கி காசோலைகளைச் சேகரித்தல், வங்கி அறிக்கைகள் மற்றும் மதிப்பிழந்த காசோலைகளை சபைக்கு வழங்குதல் போன்ற வங்கி வழங்கும் சேவைகள் மற்றும் சிறப்பு வசதிகளுக்கு சபையினால் ரூபா 100,000 மாதாந்த சேவைக் கட்டணமாக செலுத்த வேண்டும், தற்போது வரை எந்த அதிகரிப்பும் இல்லாமல் சபையால் குறித்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஈ) | சபையின் நிதி பிரிவின் நடவடிக்கைகளின் செயல்திறன் மற்றும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் சபையின் எதிர்பார்க்கப்படும் முக்கிய கட்டமைப்பு திட்டங்களுடன் கணக்கீட்டு செயல்முறையை ஒருங்கிணைப்பதை நோக்கமாகக் கொண்டு, 2021 மார்ச் 29 ஆந் திகதி சபை இலங்கை தகவல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் மற்றும் எவோல் தொழில்நுட்ப தனியார் கம்பனி ஆகியவற்றுக்கிடையே முத்தரப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2021 ஆகஸ்ட் மாதத்தில் ஒப்பந்த காலம் முடிவடைந்த பிறகு 2022 ஆகஸ்ட் வரை ஒரு வருடத்திற்கு பராமரிப்பு மற்றும் சேவையை வழங்க ஒப்பந்தத்தின் கீழ் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தாலும், ஒப்பந்த காலம் முடிவடைந்த பிறகு 2025 பெப்ரவரி 27 ஆந் திகதி ஒரு உதவி மற்றும் பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 2024 ஆம் ஆண்டில் | தற்போது தனியார் நிறுவனத்துடன் பராமரிப்பு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, பராமரிப்பு ஒப்பந்தம் 2025 பிப்ரவரி 17 ஆந் திகதி முதல் செயல்படுத்தப்படும். Core System கட்டமைப்பு செயல்படத் தொடங்கும் போது, அந்த கட்டமைப்புடன் Accpac கட்டமைப்பினை ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நோக்கங்களை விரைவாக அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு கட்டமைப்பு தொடர்பான சிக்கலான சூழ்நிலைகளுக்காக சபையினால் தொடர்புடைய கம்பனிக்கு ரூபா 705,820 கூடுதல் செலவைச் செலுத்த வேண்டியிருந்தது. 2022 முதல் 2024 வரை மென்பொருளைப் பயன்படுத்துவதற்கான வருடாந்திர உரிமக் கட்டணமாக ரூபா 5.65 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டது. வணிக நோக்கமாக இருந்த முக்கிய கட்டமைப்புடன் ஒருங்கிணைப்பு இன்னும் முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2016 ஆகஸ்ட் 26 அன்று நடைபெற்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டபடி, அரசாங்கப் பத்திரங்களில் நிதியை முதலீடு செய்யும் ஒரு முக்கிய நிறுவனமாக, பொது நிறுவனங்கள் குழுவின் கூட்டத்தில் பத்திர ஏலங்களில் நேரடி ஏல வசதியைப் பெறுவதற்காக (Direct Bidding Facility) இலங்கை மத்திய வங்கியின் முதன்மை வாடிக்கையாளராகப் பதிவு செய்தல் இதுவரை நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | வசதியைப் பெறுவதற்கான ஒப்புதலைப் பெறுவதில் உள்ள சிரமங்கள், ஏற்பட வேண்டிய மூலதனச் செலவின வரம்புகள், புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்வதில் உள்ள கட்டுப்பாடுகள், தற்போதுள்ள சம்பள அளவுகளின் கீழ் துறையில் தகுதிவாய்ந்த மற்றும் திறமையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்தல், தக்கவைத்துக்கொள்வது மற்றும் மீண்டும் பணியமர்த்துவதில் உள்ள சிரமம் மற்றும் பிற தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் உள்ள சிக்கல்கள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த வசதியை ஒரு அரசு வங்கியான மக்கள் வங்கி இலவசமாகவும் கூடுதல் ஊழியர்களை ஈடுபடுத்தாமலும் இதுவரை செய்துள்ளது. | அரசாங்க பொறுப்பு முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளை செயல்படுத்த முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட முறையே ரூபா 2.33 மில்லியன், ரூபா 2.48 மில்லியன் மற்றும் ரூபா 10.8 மில்லியன் மதிப்புள்ள 45 துரித பண்டக்குறியீட்டு ஸ்கேனர்கள் (QR-Code Scanners), 21 பண்டக் குறியீட்டு அச்சீட்டு இயந்திரங்கள் (QR-Code Printers) மற்றும் 14 ஆவண ஸ்கேனர்கள் (Document Scanners)பயன்படுத்தப்படாமல் | சபைக்கான புதிய மைய கட்டமைப்பு செயற்திட்டத்தின் செயல்பாட்டு ஏற்பு அமர்வுகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் அரையாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டது. இந்த செயல்பாட்டு ஏற்பு அமர்வுகள் தொடங்கப்படும்போது தொடர்புடைய வன்பொருள் சாதனங்களின் (Hardware Devices) கொள்வனவு | கொள்வனவு செய்த உபகரணங்கள் அதன் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | களஞ்சியத்தில் காணப்பட்டன வைக்கப்பட்டன. | மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ICTA வலியுறுத்தியது. அதன்படி, பெறுகைகள் வரிசை அமைச்சின் ஒப்புதலுடன் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட போதிலும், செயல்பாட்டு ஏற்பு அமர்வுகளை திட்டமிட்டபடி திட்டமிடப்பட்ட காலப்பகுதியினுள் ஆரம்பிக்க முடியாதிருந்த போதிலும், வணிக செயல்முறைகளை வரைபடமாக்குதல் செய்தல் மற்றும் இயக்க சூழலைத் தயாரிப்பது தொடர்பான செயல்முறைகள் தற்போது கட்டமைப்பு தொடர்பான அனைத்து பிரிவுகளுடனும் மேற்கொள்ளப்படுகின்றன. மைய கட்டமைப்பின் பெரும்பகுதியை எடுத்துக் கொள்ளும் அமுலாக்கல் தொகுதி (Enforcement Module) தொடர்பான வணிக செயல்முறைகளின் ஆவணப்படுத்தல் இப்போது சுமார் 80 சதவீதம் வரை நிறைவடைந்துள்ளது. முக்கியமான செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, திட்டம் தொடர்பான பணிகளை விரைவில் மீண்டும் தொடங்க பணிப்பாளர் சபையின் ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. இந்த கட்டமைப்பு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட பிறகு, மேற்கண்ட அனைத்து வன்பொருள்களும் பயன்பாட்டுக்கு எடுக்கப்படும். | |
| (ஆ) | நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சபையின் செயல்பாடுகள் மற்றும் சேவைகளின் செயல்திறனையும் வினைத்திறனையும் அதிகரிப்பதற்காக சபையும் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் ஆகியவற்றுக்கிடையே 2016 நவம்பர் 27 ஆந் திகதி ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, 2021 ஒக்தோபர் மாதம் செயற்திட்டத்தை நிறைவு செய்ய திட்டமிடப்பட்டது. திட்டமிடல் காலம் அவ்வப்போது திருத்தப்பட்ட போதிலும், 2025 ஏப்ரல் மாதத்திற்குள் செயற்திட்டப் பணிகளை நிறைவு செய்து நேரடி செயல்பாட்டு நடைமுறையாக மாற்ற முடியாதிருந்தது. மேலும், செயற்திட்டம் தொடங்குவதற்கு | செயற்திட்ட முகாமைத்துவம் மற்றும் ICTA நிறுவனத்தின் பிரச்சினைகள், கோவிட் தொற்றுநோய் சூழ்நிலை, மாற்ற கோரிக்கையை (CR) முடிக்க எடுக்கப்பட்ட குறிப்பிடத்தக்க நேரம், அமைப்பு செயல்பாட்டுக்கு வருவதற்கு முன்பு முடிக்க வேண்டிய பல முக்கிய மாற்றங்கள் மற்றும் OAT தொடங்குவதற்கு முன்பு கட்டமைப்பின் சோதனையின் போது கட்டமைப்பில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிழைகளை அடையாளம் காணுதல் போன்ற காரணங்களால் இந்த செயற்திட்டம் திட்டமிட்ட காலப்பகுதியில் முடிக்கப்படவில்லை. செயற்திட்ட ஏற்பு அமர்வுகள் 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் தொடங்க திட்டமிடப்பட்டது. இதற்காக, செயற்திட்ட | கட்டமைப்பை நேரடி செயல்பாட்டிற்கு பதிலாக நியமிக்க தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முன்பு மிகவும் அவசியமானதாக அடையாளம் காணப்பட்ட வன்பொருள்களை கொள்வனவு செய்ய ரூபா 145.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தாலும், அவற்றுள் ரூபா 18.6 மில்லியன் மதிப்புள்ள உபகரணங்கள் 2025 மார்ச் இறுதி வரை களஞ்சியத்தில் செயலற்ற நிலையில் இருந்தன. சேவை அலகுகளை நிறுவுதல், ஏற்கனவே உள்ள கட்டமைப்பிலிருந்து புதிய கட்டமைப்புக்கு சரியான தரவு பரிமாற்றம், ஒதுக்கப்படாத பங்களிப்புகள் மற்றும் லங்கா கிளியர் Lanka Clear தொடர்புடைய பணிகளை நிறைவு செய்யதல் மற்றும் அதன் நோக்கங்களை அடைதல் தொடர்பான பணிகளை சபை இதுவரை முடிக்கத் தவறிவிட்டது.<br>வருடாந்த செயல் திட்டத்தில், திட்ட ஏற்பு அமர்வுகள் தொடங்குவதற்கு முன்பு வணிக செயல்முறைகளை வரைபடமாக்குதல் மற்றும் செயல்பாட்டு சூழல் கட்டமைப்பை 98 சதவீதம் நிறைவு செய்வதாக அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், தற்போது அதன் செயன்முன்னேற்றம் 80 சதவீதம் என்று தலைவரால் அறிக்கையிடப்பட்டிருந்தது. | முகாமையாளராக செயற்பட்ட ICTA நிறுவனத்தின் மூலம் தொடர்புடைய வன்பொருள் சாதனங்களை (Hardware Devices) வாங்க வேண்டும் என்று வலியுறுத்தியது. மேலும், சபையில் மென்பொருள் உபகரணங்களின் கடுமையான பற்றாக்குறை காரணமாக, மடிக்கணினிகள், PC கணினிகள், மற்றும் ADF Scanners ஸ்கேனர்களுக்கான கடுமையான தேவை இருந்தது. Core System செயற்திட்டம் மற்றும் அன்றாட செயல்பாடுகளை சீராக நடாத்துவதற்காக வன்பொருள் கொள்வனவு செய்யப்பட்டவை என்பதுடன், மேலும் மேலே உள்ள பந்தி 2.2.4 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்களைத் தவிர மற்ற அனைத்து இயந்திரங்களும் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ளன, இதனால் சபையின் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. 2025.05.09 இல் உள்ளபடியாக களஞ்சியத்தில் எஞ்சியுள்ள 11 ஆவண ஸ்கேனர்கள் Document Scanners மேலே உள்ள பந்தி இலக்கம் 2.2.4 (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள திட்டத்தை செயல்படுத்துவதில் பயன்படுத்தப்பட்ட பின்னர் கட்டமைப்பின் பணிகளை வெற்றிகரமாக மேற்கொண்ட பின்னர் அனைத்து QR Code Scanners மற்றும் QR Code Printers பயன்படுத்துவது அவசியம் என்பது. | |
| (இ) | சபையின் முதலீட்டு கொள்கை கூற்றில் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் மொத்த முதலீட்டில் 87 சதவீதம் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் அரசாங்கப் பத்திரங்களில் செய்யப்பட்ட முதலீடு முறையே மொத்த முதலீட்டில் 97, 95 மற்றும் 93 சதவீதமாக இருந்தது. இந்த வரம்புகளை மீறுவது தொடர்பான முதலீட்டு கொள்கை கூற்றின் விதிகளைத் திருத்துவதில் கவனம் செலுத்தப்படவில்லை. | சபையின் முதலீட்டு கொள்கை கூற்றின் பந்தி 4.1 இன் பிரகாரம், சொத்துக்களின் ஒதுக்கீட்டின் (Asset Allocation) அடிப்படையில் அரசாங்கப் பத்திரங்களில் 87 சதவீதம் மற்றும் ஏனைய நிலையான வருமான சேமிப்பு பத்திரங்களில் அதிகபட்சம் 05 சதவீதமும், 02 சதவீதம் குறுகிய கால மீள் கொள்முதல் ஒப்பந்தங்களில் மற்றும் அதிகபட்சம் 6 சதவீதம் பங்கு முதலீடுகளில் (Equity) (பங்குகள் மற்றும் பங்குக் கட்டளைகள்) முதலீடு செய்யப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இந்த சொத்து ஒதுக்கீட்டு அமைப்பு | சபையின் முதலீட்டுக் கொள்கை கூற்று திருத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | (Asset Allocation) மூலம் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது அதிகபட்சமாக 6 சதவீதம் மற்றும் 5 சதவீதம் வரை ஒப்பீட்டளவில் ஆபத்தான பங்குகள்/பங்குக் கட்டளைகள் மற்றும் பிற நிலையான வருமான முதலீடுகளில் முதலீடு செய்யலாம் என்றும், அத்தகைய முதலீடுகள் இந்த அதிகபட்ச வரம்புகளுக்குக் கீழான பெறுமதிகளை எடுக்கும் போது, அதிகப்படியான நிதியை அரசுப் பத்திரங்கள் அல்லது குறுகிய கால (மீள் கொள்முதல் ஒப்பந்தங்கள் போன்றவை) ஆகியவற்றில் தடையின்றி முதலீடு செய்யலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, அத்தகைய சொத்து ஒதுக்கீட்டு கட்டமைப்பை அறிமுகப்படுத்துவதன் நோக்கம், முதலீட்டு கூட்டினை நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் ஆபத்தைக் குறைக்கும் வகையில் நிர்வகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதாகும். | |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல நடவடிக்கைத் திட்டத்தின்படி, 700 சுயதொழில் செய்பவர்களைப் பதிவு செய்ய திட்டமிடப்பட்ட போதிலும், செயன்முன்னேற்ற அறிக்கைகளின்படி, உண்மையான பதிவுகளின் எண்ணிக்கை 328 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. உறுப்பினர் சேவைகள் பிரிவில் இருந்து கணக்காய்வுக்கு பெறப்பட்ட தகவல்களின்படி, இந்த ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த சுயதொழில் செய்பவர்களின் எண்ணிக்கை 565 ஆகும். அதன்படி, முன்னேற்ற அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட புள்ளிவிவரங்களுக்கு இடையே ஒரு முரண்பாடு காணப்பட்டது. கணக்காய்வுக்கு பெறப்பட்ட தகவல்களின்படி, தலைமை அலுவலகம் மற்றும் 3 பிராந்திய அலுவலகங்களில் மட்டும் 50 க்கும் மேற்பட்ட சுயதொழில் செய்பவர்கள் பதிவு செய்யப்பட்டனர், அதே நேரத்தில் 9 பிராந்திய அலுவலகங்களில் பதிவுசெய்யப்பட்ட எண்ணிக்கை 10 க்கும் குறைவாக இருந்தது. மீளாய்வாண்டின் | மீளாய்வாண்டின் இறுதியில் சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சேவை உறுப்பினர்களின் எண்ணிக்கை கணினி கட்டமைப்பின் படி, 44,495 ஆக இருந்திருக்க வேண்டும், அதே நேரத்தில் முந்தைய ஆண்டில் அதே எண்ணிக்கை 43,915 ஆகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 580 சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்தோர் சேவை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். | சுயதொழில் செய்பவர்களைப் பதிவு செய்ய ஒரு முறையான திட்டம் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதிக்குள், சபையில் பதிவுசெய்யப்பட்ட சுயதொழில் செய்பவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 43,332 ஆக இருந்ததுடன், இது முந்தைய ஆண்டில் 42,753 ஆக இருந்தமையால் 579 புதிய உறுப்பினர்கள் இருந்தனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பாக ஒரு திட்ட அறிக்கை வரைவு செய்யப்படுவதாகக் கூறப்பட்ட அவதானிப்புகளுக்கு முந்தைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் அவதானிப்புகளுக்கு பதிலளித்திருந்தாலும், இது தொடர்பான முன்னேற்றம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (உ) | ஊழியர் சேம நிதியத்தில் உறுப்புரிமையை பெறாமல் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சபையில் மாத்திரம் பதிவுசெய்யப்பட்ட 22,764 தொழில்தருநர்களால் சபைக்கு அனுப்பிய மொத்த பங்களிப்புத் தொகை ரூபா 505.34 மில்லியன் ஆகும். இதற்கான பொருத்தமான வழிமுறையை சபை இன்னும் உருவாக்கவில்லை. இது தொடர்பாக சபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய மட்டத்தில் உள்ளன. | தற்போதுள்ள முறையின் கீழ், தொழில் திணைக்களத்தில் ஊழியர் சேம நிதியப் பிரிவினால் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேம நிதியச் சட்டத்தின் விதிகளின்படி தொழில் தருநர்களுக்கு வழங்கப்பட்ட அதே தொழில்தருநர் எண்ணின் கீழ் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான கணக்குகளைத் தயாரிக்கிறது. அதற்கு மேலதிகமாக எங்கள் பிராந்திய அலுவலகங்களால் நடத்தப்பட்ட கள ஆய்வுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மற்றும் தொழில்தருநர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில், மற்றும் புதிய தொழில்தருநர் கணக்குகள் தயாரிக்கப்பட்டு, அந்த தொழில்தருநர்கள் ஊழியர் சேம நிதியத்தின் கீழ் ஒரு தொழில்தருநர் எண்ணைப் பெற்று பங்களிப்புகள் சேகரிக்கப்படும் வரை தற்காலிக எண்ணின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள். நிரந்தர ஊழியர் சேம நிதியத்தின் கீழ் ஒரு தொழில்தருநர் எண்ணைப் பெற்ற பிறகு, அவர்கள் அந்த எண்ணின் கீழ் பதிவு செய்யப்பட்டு, தற்காலிக கணக்கின் இருப்பு அதற்கு மாற்றப்படும். மேலும், அந்த எண்ணின் கீழ் கணக்கில் உள்ள பணத்துடன் தொடர்புடைய ஊழியர் சேம நிதியம் தொடர்ந்து அடையாளம் காணப்பட்டு அதற்கான | தகவல்களைப் பெற்று சரியான தொழில்தருநர் கணக்குகளில் செலவு வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறைகள் செயல்படுத்தப்படுகின்றன. அந்த நிறுவனங்களை ஊழியர் சேம நிதியத்தின் கீழ் பதிவு செய்த பிறகு, சரியான தொழில்தருநர் எண்ணை அடையாளம் காண ஒரு முறையை நாங்கள் செயல்படுத்துகிறோம், மேலும் பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தொழில்தருநர்களால் செய்யப்பட்ட கோரிக்கைகளின்படி, தொடர்புடைய எண்களின் கீழ் செலுத்தப்படும் பணம் ஊழியர் வருங்கால வைப்பு நிதிக்கு அனுப்பப்படுகிறது. ஒவ்வொரு பிராந்திய அலுவலகமும், அந்த பிராந்திய அலுவலகத்தின் அதிகார வரம்பிற்குள் அமைந்துள்ள தொழிலாளர் அலுவலகங்களுக்கு தொடர்புடைய எண்களின் கீழ் பணம் செலுத்தும் தொழில்தருநர் நிறுவனங்கள் பற்றிய தகவல்களைக் கொண்ட அறிக்கையை வழங்குகிறது, மேலும் அந்த எண்களுக்கான ஊழியர் சேம நிதிய எண்களைப் பெற அவர்களை வழிநடத்துவதே இதன் நோக்கமாகும். | |
| (ஊ) | பிராந்திய அலுவலகங்களில் பாதுகாப்பு கட்டமைப்பொன்று செயற்படுத்தப்படாமையால் மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தினை மேற்கொள்ளக்கூடிய வலையமைப்பொன்று சபையிடம் இல்லாததாலும், பிராந்திய அலுவலகங்கள் வலையமைப்பிற்கு ஏற்படக்கூடிய தேவையற்ற அணுகலைத் தடுக்க வலையமைப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்த சபை திட்டமிட்டுள்ளது, ஆனால் அது இன்னும் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. | பிராந்திய அலுவலகங்களில் பாதுகாப்பு கட்டமைப்பொன்று (Fairewall) செயற்படாமையால் மற்றும் மத்தியப்படுத்தப்பட்ட முகாமைத்துவத்தினை மேற்கொள்ளக்கூடிய வலையமைப்பொன்று சபையிடம் இல்லாததாலும், பிராந்திய அலுவலகங்கள் வலையமைப்பிற்கு ஏற்படக்கூடிய தேவையற்ற அணுகலைத் தடுக்கவும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களை (Cyber Threat) கட்டுப்படுத்தவும் ஒரு கட்டமைப்பை விரைவில் செயல்படுத்த வேண்டியது அவசியம். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய, SD WAN வலையமைப்பின் ஊடாக சபையின் தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகங்கள் மற்றும் தரவு மையங்களை இணைக்க ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அதன் மூலம் ஒட்டுமொத்த கணினி கட்டமைப்பிற்கும் Fairewall பாதுகாப்பினை வழங்குவதற்கும் தேவையான வலைதளங்களுக்கான பிரவேசத்தினை தடுப்பதற்கும் சபையின் அனைத்து | தேவையான நடவடிக்கைகள் துரிதமாக எடுக்கப்பட வேண்டும். |

அலுவலகங்களையும் ஒரே இணைப்பு மூலம் உள்ளடக்கும், கணினி வலையமைப்பை மத்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரும், கணினி வலையமைப்பின் வேகம் மற்றும் நம்பகத்தன்மையை அதிகரிக்கும் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கான மைய கட்டமைப்பை அணுகும் சபையின் அனைத்து அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் இது வெற்றிகரமாக தொடங்கப்பட்டுள்ளது.